Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜயவருஷ தைமீ உகஉ வெள்ளிக்கிழமை (11 FEB. 1955) [இல-சரு]

மகாமகோபாத்தியாய

## கலாநிதி உ. வே. சாமிநாதையர் நூற்றாண்டு விழா

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கிய மகாமகோபாத்தியாய கலாநிதி உ. வே. சாமிநாதையரவர்களுடைய நூற்றோராவது பிறந்த நாள் 19-2-1955 அன்று வருகிறது. இப்பெருமானுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது தமிழ் மக்களின் தலையாய கடமை. இதன்பொருட்டுச் சென்னையில் ஒரு குழு அமைத்து, 20-2-55ல் சிறந்தவகையில் இந்த விழாவைக் கொண்டாடுவதாக அன்பர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்விழா ஓரிடத்தில் ஒருநாள் மட்டும் கொண்டாடிவிட்டு விடுவது அன்று; தமிழ் வழங்கும் இடங்களிலும் தமிழர் வாழும் இடங்களிலும் அந்த நாளை ஒட்டிப் பல நாட்கள் பலவகையில் இவ் விழாவைக் கொண்டாட வேண்டும்.

பெரிய கூட்டங்களைக் கூட்டுதல், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, வைத்துப் பரிசு தருதல், கவியரங்கம் நடத்துதல், நினைவு மலர் வெளியிடுதல், நினைவுச் சின்னங்கள் அமைத்தல், உபகாரச் சம்பளம் வழங்குதல், நூல்நிலையங்கள் நிறுவுதல் — இப்படி அவரவர்களுடைய அன்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் இந்த விழாவைக் கொண்டாடலாம் என்று விழாச் செயற்குழுவின் செயலாளர்கள் ஸ்ரீ வ. சோ. தியாகராஜன், ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் ஆகியோர் அறியத்தருகின்றனர். இத்தொடர்பில் எதுவாயினும் அறியவிரும்புவோர் ஸ்ரீ ராவிசுவநாதன் கூட்டுச்செயலாளர் நிதியாளர் சென்னை 20 என்ற விலாசத்துக்கு எழுதி அறியலாம்.

# சேவைமனப்பான்மைதிகழச்செய்க

## அறனல்லாததை அறிந்ததும் அகற்றுக

## குவாலாலம்பூரில் குன்றக்குடி அடிகளார்

இப்பொழுது மலாயாவில் சுற்றுப்பிரயாணம் செய்கின்ற குன்றக்குடி அடிகளார் பல பட்டினங்களில் சைவப்பிரசங்க மழைபொழிகின்றார். ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கி வருகிறார். ஸ்ரீ இராமசாமி நாயக்கர் வந்து போனதும், இவர் வந்தது இருள் போய் ஒளி வந்ததுபோலிருக்கின்றது இங்கேதிராவிடக் கழகத்தாருடைய வேர் ஊன்றியிருந்தாலும், குன்றக்குடி அடிகளாரின் அருள் வாக்குகள் அதனை ஒருவாறு அறுத்து வருகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கோலாலம்பூரில் எங்கள் கோயிலில் ஒரு பெரிய வரவேற்பளிக்கப்பட்டது. அடிகளார் அன்று பரவசமடைந்து பேசினார். தன் வாழ்நாளில் அன்றையகண்கொளாக் காட்சியைமறக்க முடியாதென்றார். பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒரேமுகமாகநின்று ஆனந்தக் கடலில் அழுந்தினர்கள். அடிகளார் பேசும்போது, தமிழர்களிடம் சாதி வேற்றுமைபோல மதவேற்றுமைகளும், கட்சி வேற்றுமைகளும் உண்டு. தாம் பிழை செய்கிறோம் என்று தெரிந்திருந்தும் அதைச் செய்ய முற்படுவதுகூடாது. நன்மை பயக்கும் காரியங்களைச் செய்ய முடியும் என்று எந்த ஒரு சங்கமாவது இங்கு முன்வந்தால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயார்.

அருள் நெறித்திருக் கூட்டம் தமிழ்நாடு, இலங்கை, இந்தியாவின் வடபகுதிகளில் இன்று செயல்பட ஆரம்பித்துவிட்டது. அதை ஒரு சர்வதேசக் கண்ணோட்டத்துக்குக் கொண்டுவர வேண்டியும் கடல் கடந்து வாழுகின்ற தமிழினம் நிறைந்த சைவ சமயப் பற்றுடன் நெறியான வாழ்க்கை நடத்தவும், தமிழ்மொழி பற்றி அறியவும் மலாயா, பர்மா போன்ற நாடுகளிலும் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இந்தக் கருத்தைவெளியிடுகிறேன்.

### சேவை மனப்பான்மை வேண்டும்!

அருள்நெறித் திருக்கூட்டம் இந்தநாட்டில் அமைந்து, அது நன்கு செயல்பட்டுவர உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் வேண்டும். இதிலே வேறுபட்ட கருத்துக்கள் வேண்டாத எண்ணங்களுக்கு இடமில்லாது தமிழ் வாழ்க, தமிழினம் உயர, சைவம் தழைக்க சேர்ந்து செயல்படவேண்டும். இதன் சேவைக்கு உங்களிடம் அடிப்படையான உணர்ச்சி தேவை. இதில் சேர்ந்துள்ள அனைவருக்கும் சேவை மனப்பான்மை வேண்டும் என்று கூறியதோடு அடிகளார் மேலும் சொன்னதாவது:

### தமிழினத்தின் இன்றைய நிலை....?

ஆச்சரிய விநோபாவேயின் முதல்தொண்டு 'தோட்டி' வேலை. இதிலிருந்து அவரது செயல் மக்கள்பால் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் காணமுடிகிறது. எதற்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். பட்டம் பதவியின்றி பணி செய்த தமிழினத்தின் பரம்பரை இன்று பதவியை எதிர்பார்த்து உதவிசெய்வதாகாது! மகாத்மா காந்தியடிகள் செயல்வரிசையில் கடைசியிலே இருந்தார். ஆகவே அவரது தொண்டு மக்கள் மனத்தைக் கவர்ந்தது. அவர் செயலால் இன்று இந்தியா விடுதலையடைந்தது. இதைச்சாதிக்க அவர் அமைதியான பணியையே மேற்கொண்டார். ஆகவே அவரதுசொல்லைக் கேட்டு, செயலைக் கண்ட நாம் உள்ளத் தூய்மையோடு ஒன்று சேர வேண்டும் என்றுகூறினர்.

# தருமயோகி காந்தியடிகள் திருநாள்

## அகிம்சை சத்தியம் ஆதியவைபற்றி அரிய கருத்துரைகள்

காரைநகர் சர்வோதயர் தொண்டர்களால் சைவ மகாசபை மண்டபத்தில் காந்தியடிகள் அமரத்துவம் அடைந்த தினம் கொண்டாடப்பட்டது. கொடி வணக்கத்துடன் கூட்டம் ஆரம்பித்தது. தலைவர் திரு. M. A. கந்தையா அவர்கள் தமது தலைமைப் பேருரையில் காந்தியத்தின் அடிப்படைத் தத்துவத்தை நன்கு விளக்கினர். நம் நாட்டில் நம்மவர் மகாத்மா காந்தியைப்பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இலங்கையிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் நாளாந்தம் தோன்றிவரும் பிளவுகள் மறைய இடமுண்டு. அஹிம்சை கோழையர்களின் ஆயுதமல்ல! அது தமிழன் பண்பாட்டிற்குச் சாலப் பொருந்தியது. காந்தியக்கொள்கை சமூக பொருளாதார கலாச்சாரத் துறைகளிலே நிலைபெற வேண்டும் என்று சுருக்கச் சொல்லி திரு. க. இராகவன் அவர்களைச் சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. இராகவன் காந்தியடிகள் என்னும் பொருள் பற்றி ஆங்கிலத்தில் பேசினர். அதைத் தலைவர் அவர்கள் திறம்பட மொழிபெயர்த்தார். திரு இராகவன்பேசும்போது, "இங்கு நான் இருவகை உணர்ச்சிகளின் வசத்தில் இருக்கிறேன். எங்கள் மகாத்மாவின் மறைவிற்காக சொல்லொணாத் துக்கமும் உலகத்தின அதிலும் முக்கியமாக இலங்கையின் வருங்காலத்தைப்பற்றிய கவலையும் அடைகிறேன்.

மகாத்மா மறைந்துவிட்டார் என்று அழுகிய ஒப்பாரி பாடுவதில் பயனில்லை! எங்கள் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி பலன் கருதாப் பணியாற்றலில் ஈடுபட வேண்டும்.

காந்தியடிகள் காட்டிய வழியைப் பின்பற்றி நடப்பதற்கு காந்தியம் என்றால் என்னவென்று விளங்கவேண்டும். காந்தியடிகள் சத்தியத்தைத் தேடும் நோக்கத்தோடு தன்னைப் பூரணப்படுத்திக் கொள்ள முயன்றார் என்றால் அது மிகையாகாது. பக்தி நிறைந்த வாழ்க்கையில் சாதனையிளிரும்பொழுது அப்பெரியோர் உலகத்திற்கு எடுத்துக் காட்டாக அமைவார்கள். காந்தி உலகத்தைத் திருத்தவில்லை. தன்னைத் தான் திருத்திக்கொண்டார் என்று ஆழ்ந்த கருத்துடன் கூறினர் ஒரு பெரியார்.

காந்தி மகானின் சேவைகளிலே இதன் உண்மையைக் காணலாம். அவருடைய கடைசிக் காலத்தில ஒரு அகதி, நீங்கள் ஏன் இமயம் சென்று ஆத்ம சாந்தி அடைதல் கூடாது? என்று குத்தலாக வினவியபோது அவ்விதம் நான் போய்க் கிடக்கும் அமைதியைவிடக் குழப்பம் நிறைந்த உங்கள் மத்தியிலே இடையிடையே கிடைக்கும் சமாதானத்தையே பெரிதும் மதிக்கிறேன். அதுவே எனக்குப் போதுமானது. ஒருவேளை எல்லாருமே இமயம் சென்றால் நான் அப்பொழுது தொண்டுசெய்ய உங்களுடன் வருகிறேன் என்று சிறிதும் கோபிக்காமல் மறுமொழி அளித்தார்.

காந்தி அண்ணல் தருமயோகியானபடியால் அவர் வகுத்த திட்டத்தை நாங்கள் சாதனமுறைக்குக் கொண்டுவருவோம் என்று இப் புனித தினத்திலே ஒரு தீர்மானம் செய்து கொள்வோம். காந்தியினுடைய கடவுள் உண்மை. அதுவே எங்கள் கடவுளாயும் இருக்கட்டும். சர்வோதய சங்கங்கள் நாடெங்கும் பரவக் கடவுள் உதவிசெய்வார் என்று கூறினர்.

திருச்சாழல்
வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். ஜய ஹூ தை மூ
உக உ வெள்ளிக்கிழமை

## போர்க் கோலமா ........?

இரணிய ஆணவம் என்றும் பேரிடர் விளைவதற் கறிகுறி யென்றே சொல லுதல் வேண்டும். அழித் தற்கான ஆயுதங்களிலே இப்பொழுது உருசியா முதலிடம் பெற்றுவிட்ட தாகமொலொட்டோவென் பார் வீராவேசத்துடன் வெளியிட்டிருக்கின்றார். உருசிய நாட்டில் முதல் அமைச்சராக இருந்த மலன்கோவென் பாரின் ஊக்கம் போதாதென்று விலக்கப்பட்டார். போர் மோசாத் தீவிலே மேகங் கள் காரிருள் பெற்றுப் போர் வரவைக் காட்டும் வகையிற் படிந்திருக்கின் றன. இந்த நிலையிலே யாதுதான் விளையும் என்று சொல்லுதல்முடியாது.

ஆசிய அமைச்சர்கள் இந்த நிலைமையை மாற்றி விடலாமென இங்கிலாந் திற் கூடி எவ்விதத்திலா வது போர் நிகழாதபடி தடுத்து வைக்கப் பெரு முயற்சி எடுத்து வருகின் றார்கள். ஆனல் நோய் எங்கே இருக்கின்றது அதன் இயற்கைத் தன்மை யென்ன என்பதை நன் கறிந்தும் ஆசிய அமைச் சர்கள் நாற்காலியி லிருந்த படியே மாற்று மருந்து கொடுத்து விடலாம் என்று எண்ணுவது ஆச்சரியமா யிருக்கின்றது. உருசியா வும் அமெரிக்காவும் உலக ஆட்சியை நாடி உபாயங் கள் தேடிக்கொண் டிருக் கின்றார்கள் என்பது தெளி வாய்த் தோன்றுவதை ஆசிய அமைச்சர்கள் அறி வார்கள்.

உருசிய முதல் அமைச் சர் பதவியை வகிக்கக்கூடி யவர் போர்க்களை கூவி வெற்றிபெறும் வீரத்தன் மை வாய்ந்தவராக இருத் தல் வேண்டு மென்பதே அந்நாட்டு அரசியற்றலை வர்கள் கருத்து. அமெரி க்கா பொதுவுடைமைப் புர ட்சி மேற்கிலும் புகுந்து விடும் என்று அச்சங் கொண்டு உலக ஆதிக்கத் தைத் தன்கையில் வைத் துக்கொள்ளும் வகையில் அரச தந்திரங்களைக் கை யாளுகின்றது. இல்லை யேற் போர்மோசா அலுவ லிலே புகுந்தாற் போர் மூண்டுவிடும என்று அறி ந்தும் கொண்டது விடாத படி செய்தல் வேண்டும்.

# வற்றாத ஊற்றாயுள்ளது எங்கள் மதம்

## முன்னேற்ற வழியில் முயற்சி செய்வதற்கு முன்வாருங்கள்

## இந்து மாமன்றத் தலைவரின் அழைப்பு

நிரீச்சுரவாதம் முதலிய விபரீதங்களுக்கு எங்கள் பாலர் களும் இளைஞர்களும் இரையாகி வருவதைக் காண்கிறோம். இது சகிக்க முடியாத பெருந் துன்பமாய் இருக்கின்றது. அவர்களை இந்த ஆபத்தினின்றும் காப்பாற்ற யாம் விரை தல வேண்டும். பாடசாலைகளில் தக்க முறையில் சமயக் கல்வியூட்டவும், வாலிபர்களுக்கிடையில் சமய சங்கங்கள ஸ்தாபிதமாகவும், வேண்டிய முயற்சிகள் நடைபெறல் வேண் டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றப் பேருரை நிகழ்த்திய திரு. சி. குமாரசுவாமி அவர்கள் மிகமிகப் பொருத்தமாக அவ்வுரையை முடிக்கு முகத்தால் கூறினர்.

வெள்ளவத்தை கொழும்பு இந்துக் கல்லூரி மண்டபத் தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை இமமன்றம முறைப்படி ஆரம்பமாயது.

(தலைமைப் பேருரையிற் சில பகுதிகள்)

இப்போது எங்கள் சமூகம் இருக்கும் நிலைமையில் இம மாமன்றத்தைத் தோற்றுவிக் கும் கைங்கரியம் மிகவும் பொ ருத்தமானது என்பதை நீங் கள் எல்லீரும் ஒப்புக்கொள் ளுவீர்கள்.

இப்பொழுதுள்ள உலகநிலை மையைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். விஞ்ஞானத்தின் விளைவாக மனித வாழ்விற்கு வேண்டிய வாழ்க்கைச் சாத னங்கள் யாவும் முன்னெப் போதும் இல்லாத வகையில் பேரளவில் மலை மலையாய்க் குவிக்கப்படுகின்றனவே! அவ ற்றை இன்னும் வேண்டிய அளவிற்குப் பெருக்கியும் கொள்ளலாம். எனினும் உல கத்தில் திருப்தி இல்லை! சாந்தி இல்லை! உலக சமாதா னம் ஓடி ஒளித்து விட்டது. பகைமையன்றோ பரந்தோங்கி வளர்கின்றது! உலக அழிவிற் குக் காரணமான யுத்த பூதம் தனது விசுபரூபத்தை - கோர வடிவத்தைக் காட்டுவதற்கு எப்படிப் பார்த்துக் கொண்டு நிற்கின்றது. இதுதான் இன் றைய உலகத்தின் வாழத்தெரி யாத பரிதாபகரமான நிலை.

பண்டு தேவர்களும் அசுரர் களும் திருப்பாற்கடலைக்கடை ந்தபோது கொடிய நஞ்சு தோன்றியதுபோல், நல்லவர் களும் தீயவர்களுமாகிய இக் கால மக்கள் விஞ்ஞானம ஒன்றே நமக்குக் கதி என்று அதனை முழுக முறுகக் கடைந் தார்கள். வெளிப்பட்டது நஞ்சு. கண்டு கண்டு அஞ்சு கின்றது உலகம்.

விஞ்ஞானம் வேண்டியதே; வாழ்விற்கு அது இன்றியமை யாததுர்தான். ஆனல் விஞ் ஞான அறிவில் நஞ்சுங் கலந் திருக்கின்றது அக்கொடிய நஞ்சை அழிக்கும ஆற்றல் சமயத்திற்கு மட்டுமே உண்டு என்பதை மேல்நாட்டு அறிஞர் கூட இப்போது ஒப்புக் கொண்டு விட்டனர். அதன் விளைவாக ஆத்மீக விழிப்பு உலகில் இப்போது அரும்பி இருக்கின்றது. ஆத்மீக மறு மலர்ச்சி, சமயப் புனருத்தார ணம் என்னும் பேரியக்கங்கள் உலகின் பல பாகங்களிலும் எழுந்திருக்கின்றன.

அழித்தல் நெறியில்சென்று கொண்டிருக்கும் உலகினைத் தடுத்தாட்கொள்ளும் பொரு ட்டு உலகப் பேரறிஞர்களும் சமயநெறியாளரும் நிவிரப் பட்டு நிற்கும் இவ்வேளையில் இந் நாட்டிலுள்ள இந்துசமூக மும் தீவிரமான ஒரு புனித இயக்கத்தில் ஈடுபட முற்பட் டது மிகவும் பொருத்தமான செயலாகும். எனினும் ஒரு சிறு எச்சரிக்கையை இந்த இடத்தில் கூற விழைகின்றது எனஉள்ளம். புனித எண்ணத தோடு தொடங்கப்படும் சமய இயக்கங்களிற்கூட ஆபத்து இருக்கின்றது.

இன்றைய உலகில் மதங்கள் ஒன்றோடொன்று முரண்படல் ஆகாது. முரண்பாடு ஏற்ப டாத வகையில் மதங்கள் நட ந்துகொள்ள முயற்சித்தல் வேண்டும். எங்கள் மதம உயர்ந்தது, உங்கள் மதம் தாழ்ந்தது என்னும் பேச்சுப் பழங்காலத்துப் பேச்சு. அத் தகைய மனப்பான்மை அருள் நெறி வளர்க்க முற்படும் புனி தத்திற்கு முற்றும் விரோத மானது. மதப்பெருமை பேசி மதவெறிக்கு இடங்கொடுத் தால் மனித குலத்திற்கு இடர் செய்தவர்களாவோம். உலகில்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

அரசியல் அலை

# கொழும்பு மாநகர சங்கப் பதிற்றலைவரின் கோலமென்ன ?

## சிவப்பா, பச்சையா செந்நிற வெள்ளையா?

இராணி எலிசபெத்து (இரண்டாவது) இலங்கை வந்தபொழுது மும்மொழிப் பேச்சு முழக்கி முதன்மை பெற்ற திரு உருத்திரா பின்னரும் ஒரு மூமொழிப் பேச்சு நடத்தியிருக்கின்றார். களரி வேறு, கருத்து வேறு, கண்டமும் வேறு.

சிங்களத்தையே அரச மொழி ஆக்கினல் என்ன என்று தங்கருத்தை வெளி யிட்ட இவர் கொடியும் செல்வி அதை அவிழ்க்கும் படியும் சொன்னது நவமாயிருந்தது. வெள்ளவத்தைத் தொகுதியிற் சிங்களம் பேசும் மக்கள் தொகை அதிகம் என்றதற்காக இப்படியாகப் பேசினேன் என்று எண்ணி விடாதீர்கள் எனக் கருத்துரையும் தொகுத் துரைத்தார் திரு. உருத்திரா.

இந்த அவசரத்திலே இடது சாரிகளும வந்து சேர்ந்தனர் (திரு உருத்திரா இடதுசாரி அல்லவா என்பதைப் பினனர் ஆராயலாம்) இரண்டு பக்கத் துக்கும கலந்து பிரிந்து கருத் துரைத்தார்கள். தங்களையும் இடதுசாரி உள்ளக் கிடக்கை யையும் தங்களை அறியாமலே வெளியிட்டார்கள்.

வாயிருந்தால் வங்காளம் போகலாம என்பது பழ மொழி; வாயில் வந்தவிதமே ஆய்வின்றிப் பேசும் அரசியல் வாதிகள் தமிழ் பேசும் மக் களை வங்காளம அல்ல எங்கா வது வழியனுப்ப நினைத்திருக் கிறார்கள் போலும்!

உருசியாவில்
அரசியல் நாடகம்

மாயமாய் மறையும் அரசி யற் காட்சி உருசியாவிற்றான் காணமுடியும். மலென்கொவ அகன்று விட்டாராம். ஏன்கு அகன்றார் எப்படி அகன்றார்

## ஸ்ரீ உருத்திராவின் மொழிக் கொள்கை ?

கொழும்புமா நகரத்தின் சென்றகூட்டத்தில் சபைக் காரியங்கள் தேசீய பாஷை களிலே நடத்தப்படவேண் டுமெனக் கொண்டுவரப் பட்ட பிரேரணையில் தேசீய பாஷைகள் என்பதற்குப் பதிலாய் "சிங்களம்" என் றிருக்கவேண்டுமென்று ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தாராம் உப தலைவர் ஸ்ரீ உருத்திரா. ஆனல் 4 வாக்குகள் சாத கமாக, 18 வாக்குகள் பாத கமானமையால் அதுதோற் றது.

## யாழ்ப்பாணத்தில் உயர் நீதிமன்றம்

யாழ்ப்பாண நகர மண்ட பத்தில் சென்ற திங்கட் கிழமை உயர் நீதிமன்ற விசாரணை (சுப்பிறீம் கோட்) தொடங்கியிருக்கின் றது. பிரதம நீதிபதி சேர் அலன் றோஸ் நீதிபதியா யமர்கின்றார்.

## வரப்போகின்றது மகாவலி கங்கை

முரசுமோட்டை குடி யேற்ற மக்களின் பொதுக் கூட்ட மொன்றிற் பேசும் போது வடமாகாண மக்க ளுக்கு வேண்டியது தண் ணீர். மரணமடைவதற்கு முன் மகாவலி கங்கையை நான் வடபகுதிக்குத் திருப் புவேன் என்று உறுதி மொழி கூறினராம் சாவகச் சேரிப் பிரதிநிதி ஸ்ரீ வி. குமாரசாமி.

## சட்டத்தால் மதுபானம் நீக்குதல் சரியல்லவாம்!

மிகஹாவத்தைக் கிராம முன்னேற்றச்சங்கவருடாந்தக் கூட்டத்தில் தலைமை வகித் துப் பேசும்போது அளவு கடந்த சிர்கேட்டைச் சமூகத் தில் மது உண்டாக்குகின்றது என்பதை நான் ஒப்புக்கொள் ளுகிறேன். ஆனல் அதைச் சட்டத்தால் நீக்குதல் முடி யாது. சட்டத்தால் நீக்க முயன்றால் சட்டவிரோதமான மதுபானச்செய்கையும் முறை யீனமாக விற்றலும் பெருகும் என்று கூறினராம் உணவு மந்திரி ஸ்ரீ ஜே ஆர். ஜயவா தன.

இவரின் இப்போதைய நிலை யென்ன! என்று கேட்டாற் பொதுவுடைமை ஆட்சியின் புதுமையும் பெருமையும் இவ் வித நிகழ்ச்சியிலேயே தங்கி யிருக்கின்றன என்று ஊகிக்க லாம். எதிர்ப்பு இருக்கக் கூடாது என்ற அரசியற் கொள்கைதான் பொதுவுடை மைக்கொள்கை. எதிர்த்தால் விதி சதியாய் விளையும என் பது சொல்லாமலே அமையும். பூரண சுதந்திரப் புண்ணிய நாடு பொதுவுடைமை நாடு என்று பொக்குவாய் ஆச்சி பொரிமாவை மெச்சியவாறு இந்நாட்டுப் புரட்சிக் கட்சியி னரின் கூற்றை உருசிய அரசி யற்பெரியார்களின் முடிவு வர லாற்றோடு சேர்த்து ஆராய்ந் தால் அறியலாம் உண்மையை,

# ஈழநாட்டுக்கு எழில் அளிக்கும் சைவ ஆலயங்கள்

——:o:——

## வடபால் அமைந்துள்ள வரலாறு

——:o:——

விருதுநகரில் சைவசித்தாந்த சமாச 49-ம் ஆண்டு விழாவில் திருமதி கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராசா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

### திருக்கோணேஸ்வரர்

கோணமாமலை என்னும் முக்கோண வடிவினதாய் இக்கமலை ஈழநாட்டின் அரணாய் விளங்குவதாயும் உலகப் பரப்பின் கிழக்குப் பகுதியிலுள்ள இயற்கைத் துறைமுகங்களில் சிறந்ததென்னும் தனிப் பெருமைகொண்டதாயுமின்டவிஸ் திரணமாய் இம் முமமலைகள் சூழ்ந்ததனுலேயே ஆதிகாலத்திலே தமிழர் இலங்கையிற் குடியேறியபோது திரிகோணமலைப் பகுதியிலேயே குடியேறியதாய் சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இத்தலத்தையே கோணேஸ்வரமென்றும் திருக்கோணமலை, திக்கோணமாமலை திருக்கோணாசலம் என மும்மலைகளின் தொடர்புடையதனுல் வழங்கித்தனர் போலும். திருஞானசம்பந்தசுவாமிகள் "கோணமாமலை" யென்றே தம் தேவாரத்திற் குறிப்பிட்டிருக்கின்றார். அருணகிரிநாதசுவாமிகளும் "திருக்கோணமலை" யென்றே பாடியிருக்கின்றார். ஆனால் இவைகளுள் சரியான பெயர் எதுவோ அறிய முடியவில்லை.

இராவணனுடைய தாய் நித்முமம் கைலாசமலைக்குச் சென்று சிவபிரானை வணங்க வந்ததாலதாய் நெடுந்தூரம் போகும் வேதனையை நீக்கும் பொருட்டு, கைலாசமலையிலுள்ள ஒரு கோணத்தை அதில் வீற்றிருந்த சிவமூர்த்தியுடன் பெயர்த்து, இராவணன் தன் இராசதானியாகிய இலங்கையில் வைத்தனர் என முதியோர் கூறுவதுண்டு. அது எவ்வாறாயினும், முன்னே இலங்கையையாண்ட வரராமதேவன் என்னும் சோழகுல அரசன் தொடங்கிய கோணேஸ்வர ஆலயத்தை அவன் மகன் குளக்கோட்டன் நிறைவேற்றி தான் விரும்பிய ஆடகசவுந்தரியென்னும் அரசகுமாரியை மணந்து செங்கோலோச்சி சிவலோகஞ் சேர்ந்தானெனவும் தக்ஷிணகைலாசபுராணம் கூறுகின்றது. குளக்கோட்டனுல் நிறைவேற்றப்பெற்ற இத்திருத்தலம் அழகிய மண்டபங்களும் வாவிகளுமுடையதாயிருந்ததெனப் பகை அததாட்சிப்படுத்த திருஞானசம்பந்த சுவாமிகள்

> நிரைகழலரவஞ் சிலம்பொலி
> யலம்பு
> நிமலர்நீ றணிதிரு மேனி
> வரைகெழு மகளோர் பாகமாப்
> புணர்ந்த
> வடிவினர் கொடியுடையணி
> விடையர்
> கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
> மளப்பருங் கனமணி வரன்றிக்
> குரைகட லோத நித்திலங்
> கொழிக்குங்
> கோணமா மலையமர்ந் தாரே.

என்று தம் பதிகத்திற் கூறியிருப்பதே குறிப்பிடத்தக்கது.

குளக்கோட்டனின்பின் இலங்கையையாண்ட மன்னரிற் சிலராகிய கயவாகு, புவனேயவாகுவெனப்படுவோரும் யாழ்ப்பாணத்திலிருந்து அரசு செய்த ஆரிய அரசரும் இப்பெருமானுடைய அன்பராய் இத்தலத்தைச் செவ்வனே காப்பாற்றி வந்தனர். கி. பி. 1627-ம் ஆண்டின் பின்வந்த போத்துக்கேசர் இக்கோயிலை அழித்து, அதன் கற்களை உபயோகித்து அவ்விடத்தில் தமது வசதிக்கேற்ற கோட்டையை அமைத்தனர். அதனுல் இத்தலத்தின் பிரதான சாசனங்கள் சிதைந்து விட்டன. ஆனால், "முன்னே குளக்கோட்டன் மூட்டும் திருப்பணியை பின்னே பறங்கி பிரிப்பானே — மன்னவனே பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணர் ஆண்டபின்பு மானே வடுவாய் விடும்" என்னும் ஒரு வெண்பா சிற்ப முறையிற் செதுக்கப்பெற்று காலகதியிற் தேய்ந்த முறையில் இன்றும் கோட்டைவாசலிற் காட்சியளிக்கின்றதென அறியக்கிடக்கின்றது. பறங்கியர் கோயிலை இடித்தது மல்லாமல் பூசை, வழிபாடு செய்வோரையும் துன்புறுத்தியதால் அக்காலத்திலிருந்த சிவபக்தர்கள் அங்குள்ள விக்கிரகங்களை பறங்கியர் அறியாதபடி நிலத்தில் தலைகீழாய் ஆழப் புதைத்து விட்டனர். சென்ற 1950-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ந் திகதி கிணறு கிண்டும் காரணமாய் அவ்வூர் வாசிகள் நிலத்தை வெட்டிய போது சிவன் (சோமாஸ்கந்த மூர்த்தம்) பார்வதி சந்திரசேகரர் ஆகிய மூன்றும், இதற்கு முன்னராகவே கண்டெடுக்கப்பட்ட கணேசர், பார்வதி, திரிசூலம், அன்னப் பறவை ஆகிய இவைகளும் இறைவன் அருளால் தற்கால மக்களின் புண்ணியப் பேறாய்ப் பெறப்பெற்றன. பறங்கியரால் அழிக்கப்பெற்றும் அன்பர்கள் அவ்வாலயமிருந்த இடத்தில் பூசனையைத் தவறாது நடத்தியே வருகின்றனர். தற்போது கண்டெடுக்கப்பட்டதாய இம்மூர்த்தங்கள் உலகத்திலுள்ள பல்வேறிடங்களிற் காணப்படும் விக்கிரகங்களுள் மிகவும் சிறந்த வேலைப்பாடமைந்த சிறப்பின் கலைத் திறமை கண்கு புலப்படுத்துகின்றன. சுகாசனத்தில் வீற்றிருக்கும் தன்மையமைந்த சிவமூர்த்தம் இலங்கைவாழ் சிற்பிகளால் அமைக்கப்பட்டதெனவும், சந்திரசேகரமூர்த்தமாய் அமைந்த மேலேசொல்லிய விக்கிரகத்துக்கு நெடுங்காலம் முன்னதாயிருக்கவேணுமெனபதும் அறிவாளர் கொள்கை. சக்தியின் தோற்றம் தண்ணளி மிகுந்த பாவனையாகவே இருக்கின்றது. கூறுமிடத்து ஒவ்வொன்றும் அருளொழுகு முகங்களாகவே காட்சியளிக்கின்றனர். பழமையான கோணமாமலையில் தற்காலம் ஒரு சிறு ஆலயம் அமைத்தே இத்திருமூர்த்தங்களைப் பிரதிட்டை செய்து அன்பர்கள் வழிபட்டு வருகின்றார்கள். பறங்கியர் கோயிலை அழித்தபோது அக்கோயிலிலுள்ள மூர்த்தத்தில் ஒன்றை தம்பலகாமம் என்னும் உள்ளூர்க் கிராமம் ஒன்றிற்கு கொண்டுபோய் ஓர் சிவன் கோவிலமைத்து இன்னும் அன்பர்கள் அங்கும் வழிபட்டு வருகிறார்கள்.

### சித்திரவேலாயுத சுவாமி

இலங்கையின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில மகாவலியாறு என்னும் நாமத்துடன் ஓர் ஆறும் அதன்கரையில் சித்திர வேலாயுத சுவாமி கோயிலும் உண்டு. பாரததேசத்திலிருந்து குஷ்டரோகினுல் வருத்தப்பட்டுக் கதிர்காமம் யாத்திரை போக எண்ணி அப்படியே ஈழநாடு அடைந்து கடைவழியாய்க் கதிர்காமம் சென்றுகொண்டிருந்த நாதகாமஞ் செட்டியாரென்பார் இம்மகாவலிக் கங்கைக் கரையில்படுத்துறங்கும்போது இவ்விடத்தில் எனக்கு ஓர் ஆலயம் அமைத்து வழிபட உனது குஷ்டரோகம் நீக்குமென கந்தவேள் ஆக்ஞாபிக்க அச்செட்டியாரும் நித்திரை தெளிந்து அவ்வாறே அவ்விடத்திற் கோயிலெடுத்து வேலாயுதக் கடவுளைப் பிரதிஷ்டை செய்தனர். இவ்வடியார் தன் ஜென்ம பூமியாகிய இந்தியாவிலிருந்தே சிற்பிகளை வருவித்து இக்கோயிலை நிறைவேற்றினர். அவருடைய உருவமுள்ள ஓர் சிலையும் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றதென அறியக் கிடக்கின்றது. இக்கோயில் கருங்கலினுலே கட்டப்பெற்றதனுல் இன்றும் புதிதான நிலையிலிருக்கின்றது. இதற்கு ஓர் பல்லக்கு உரிமையாயிருக்கின்றது. அது சோழராட்டரசன் மகனை குளக்கோட்டனுற் கொண்டுவரப்பட்டு, கோயிற் திருப்பணிக்குப் பொறுப்பாக நியமித்த தனித்துண்ணுப் பூபாலபின்ளை வன்னிமை யெனபவற்குரிய பல்லக்கெனக் கோணேசர் கல்வெட்டிலிருந்து அறியக் கிடக்கின்றதாம். இக்கோயில் உள்வீதியில் ஒரு கருங்கல்லில் சில எழுத்துக்கள் பொறித்தபடி காட்டப்பட்டிருக்கிறதாம். அது எந்த மொழியென்றும் என்ன வாக்கியமென்றும் ஆராய்ச்சியாளர் அறிந்து தெளியத் தருவது நன்மையாகும். (வரும்)

——

## குரக்கன் அழிவு

ஊறுகுன என்னுமிடத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விளைந்த குரக்கன் பெருமழையால் அழிந்து விட்டதாம்.

## ஆயுர்வேதத்திற்கு ஏற்றஇடம் அளிப்பதின் அவசியம்

ஆயுர்வேதத்திற்கு ஏற்ற இடம் கொடுக்கத் தக்கசில சிறந்த ஒழுங்குகளை எடுத்துக் காட்டுகின்ற ஒரு அறிக்கையைச் சுகாதாரப் பகுதியார் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருக்கின்றனராம்.

புறம்பான அரசாங்க ஆயுர்வேத ஆட்சிப்பகுதி, ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம். ஆயுர்வேதக் கல்லூரியின் வெளிநோயாளர் பகுதியைப் பருப்பித்தல், புறம்பான ஆயுர்வேத கருமச்சபை என்பன இவற்றுள் முக்கியமானவையாகும்.

——

## யாழ்ப்பாண நூல் நிலையம்

யாழ்ப்பாண நகரசபை தெரிந்தெடுத்து அத்திபாரக்கல் இட்ட இடத்திலேயே யாழ்ப்பாணம் மத்திய நூல் நிலையம் அமைக்கப்படவேண்டுமென்று யாழ்ப்பாண நகரசபையார் சென்ற நகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

——

## போர்மோசா அமெரிக்கருடையதல்ல

— அந்தோனி கிறீன்வுட்

பிருத்தானிய தொழிற் கட்சிப பாராளுமன்ற அங்கத்தவர் ஸ்ரீ அன்தொனி கிறீனவுட் இலண்டனிலே பேசும்போது சட்டமுறையிற் போர்மோசா எப்படியிருந்த போதிலும் நிச்சயமாக அது அமெரிக்காவின் உடைமையல்ல. போர்மோசா மக்களின் எண்ணம் என்ன என்றறிய வேண்டிய காலம் வந்துவிட்டது என்று கூறினராம்.

## யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்குத் தண்ணீர்

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு திருநெல்வேலியிலிருந்து தண்ணீர் வரச் செய்யும் ஒரு திட்டத்தைச் சுகாதார மந்திரி ஏற்றுக் கொண்டார் என்று அறியவருகின்றது.

## சோனகரின் மொழிபற்றி சேர். இரசீக்

இலங்கைச் சோனகருக்கு இது ஒரு சோதனை காலம். எமக்குப்பொருத்தமான தேசிய மொழி எது என்ற கேள்வி உண்டாயிருக்கின்றது. இலங்கைச் சோனகருக்குச் சிறந்த தேசிய மொழி தமிழ்தான். என்றாலும் இதுபற்றி நாம் எல்லோரும் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கம்மல்துறை சோனகர் சங்க ஆண்டுவிழாவிலே தலைமை வகித்துப் பேசும்போது சேர். இரசிக் பரீத் கூறினாராம்.

——

## யாழ்ப்பாணத்தில் நெல்லுக் களவு

முன் என்றுமில்லாத நெல்லுக் களவு சில ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நடந்து வருகின்றது. இதைத் தடுக்கத் தொண்டர் படைகளும் தொண்டாற்றி வந்தன. இக்களவு முறை தென்மராட்சியில் இப்பொழுதே அதிகரித்து விட்டதாம். ஆகையால் தென்மராட்சிக் காரியாதிகாரி கமக்காரர் கூட்டமொன்றைக் கூட்டி கமங்களைக் காவல் செய்வதற்கு ஒழுங்கு செய்திருக்கின்றாராம், இவை இப்படியிருக்க, களவாக நெல்லு வெட்டிய ஒருவர் மீசாலையில் பிடிக்கப்பட்டு விட்டார். இதைப்பார்த்து காரியாதிகாரி காட்டிய வழியைக் கிராமங்களிலுள்ள கமக்காரர் யாவரும் பின்பற்றுவார்களென்று கருதப்படுகின்றது.

---

## சுதந்திரஉணர்வைப் புறக்கணிப்பதா!

## கோவாவுக்கு இந்தியாவின் இரண்டாம் எச்சரிக்கை

கோவாவைச் சேர்ந்த அறப் போர் வீரர்களைப் போர்த்துக்கலிலோ அல்லது ஆப்பிரிக்காவிலோ உள்ள சிறைக்கூடங்களுக்கு அனுப்பவும் கோவா இந்தியர்களை நாடுகடத்தவும் போர்த்துக்கீசிய அரசாங்க அதிகாரிகள் எந்த முயற்சியும் செய்யக்கூடாதென இந்திய அரசாங்கம் மீண்டும் எச்சரிக்கை செய்திருக்கிறது.

இந்தியர்களை நாடுகடத்தும் வேலைகளில் போர்த்துக்கீசிய அதிகாரிகள் தொடர்ந்து ஈடுபடுவார்களானுல், அதனுல் இந்தியாவில் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்று இந்திய அரசாங்கம் கூறியுள்ளது.

இந்தியாவிலுள்ள வெளிநாட்டுப்பகுதிகளை விடுதலை செய்தே தீருவதென்ற சுதந்திர உணர்ச்சி இந்திய மக்களிடையே நிலவி வருகிறதென்றும், இந்த உணர்ச்சியை மதித்து பிரித்தானியரும், பிரெஞ்சுக்காரரும் வெளியேறிவிட்டதைக் குறித்தும் இக் குறிப்பு எடுத்துக்கூறி, கோவா மக்களின் சுதந்திர உணர்வைப் போர்த்துக்கீசிய அரசாங்கம் அங்கீகரித்தே தீரவேண்டுமென்று அறிவுறுத்துகிறது.

——

# இந்தியாவிலும் இசைநாட்டிய ஈழத்துச் சான்றோர்

———0———

[ "புகலியர்கோன்" புகல்வது ]

## 16. காசிவாசி செந்திநாத ஐயர்

இவர் யாழ்ப்பாணத்துள்ள ஏழாலை என்னுங் கிராமத்திலே வசித்த சின்னையர் என்பவரின் புதல்வராவர்; தமது மாமனாராகிய கதிர்காம ஐயரிடம் வடமொழி தென்மொழி இரண்டையும் நன்கு கற்று வந்தார். பின் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் சென்று ஆங்கிலமுங் கற்றார். அதன்பின்னர் உயர்தரக் கல்வி பயிலவேண்டுமென்னும் நோக்கங் கொண்டு நல்லூர்ச் சம்பந்தப் புலவரையடைந்து அவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சந்தேக விபரீதமறக் கற்று வல்லுநரானார்.

சென்ற 1872-ம் ஆண்டில் நாவலரவர்கள் இந்த ஐயருடைய கல்வித்திறமையை உணர்ந்து, வண்ணார் பண்ணையிலுள்ள தமது சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஆசிரியராக நியமித்தனர். நாவலரவர்கள் தாம் செய்துவந்த சைவ சமய விருத்தி, தமிழ்மொழி விருத்தி என்னுமிவைகளுக்குச் செந்திநாத ஐயரையும் தமக்குத் துணையாக வைத்துக்கொண்டு இவரிடத்துப் பெரிதும் அன்பு பாராட்டி வந்தார். நாவலரவர்கள் சிவபதமடைந்த காலத்துச் செந்திநாத ஐயர் பெரிதும் வருந்திப் பாடிய இரங்கற் பாக்களுள் ஒன்றை இங்கே தருகின்றோம்.

வெண்பா

"வன்றொண்டன் நாவலர்கோன் வாழ்வா வதுமாய
மென்றுரைத்த தேவாரத் தின்பொருளை - நன்றியுடன்
சிந்தைசெய்தேன் நாவலனே செத்தாய்நீ யெனபதனாற்
புந்திநொந்து போதமிக்க போது"

ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் சகவாசத்தினால், செந்நாத ஐயரும் சமய சம்பந்தமாகவும், தமிழ்மொழித் தொடர்பாகவும் பல அரிய உபந்நியாசங்களைச் செய்தும் பல வியாசங்களை எழுதியும் வந்தார். இந்தியாவிற்கு தலயாத்திரை தீர்த்த யாத்திரை செய்யச் சென்ற காலங்களில் அரிய பிரசங்கங்களைச் செய்தும் சிறந்த வியாசங்களை எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டும் அங்குள்ள கற்றோர் பலருடைய கட்டைப் பெற்றார். இந்தியாவிலுள்ள சூரியனார் கோயில் மட ஆதீனத்தார் இவரது சித்தாந்த சாத்திர அறிவையும், கல்வித் திறமையையும், வாக்கு வன்மையையும் பாராட்டி இவருக்குச் "சித்தாந்த சிகாமணி" என்னும் பட்டத்தை வழங்கிச் சன்மானித்தனர்.

இவரியற்றிய பிரதான நூல்கள்: கந்தபுராண நவநீதம், ஞானரத்நாவளி முதலியவாகும். இவரெழுதிய கண்டன நூல்கள்: சிவனுந் தேவனென்னுந் தீய நாவுக்கோர் ஆப்பு, சாண்க்ஷத்திரியப் பிரசண்டமாருதம் முதலியனவாம். மேலும் இந்துசாதனம், விவேக திவாகரன், நாகை நீலலோசனி, விசயத்துவம் முதலிய பத்திரிகைகளிற் பரமத கண்டனமாகவும் சுயமத தாபனமாகவும் பல அரிய வியாசங்களைக் காலத்தோறும் எழுதி வெளியிட்டுவந்தார்.

வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் படம் எனப் பெயரிய பிரணவப் படமும் இவரால் 1901-ம் ஆண்டிலே அச்சிட்டு வெளியிடப்பட்டது. கருங்குழி இராமலிங்க பிள்ளையின் பாடல் காரணமாக மேலைப் புலோலிக் கதிரவேற்பிள்ளைக்கும் அச்சென்னையிலுள்ளார் சிலருக்கும் அங்குள்ள பிரதம நீதிஸ்தலத்தில் ஒரு வழக்கு நடைபெற்றது. அவ்வழக்கிற் சாட்சி பகர்ந்தவர்களில் இவரும் ஒருவர். வழக்கு முடிந்த பின்னர் பிள்ளையவர்கள் இவருக்கு எழுதி விடுத்த கடிதம் பின்வருமாறு:—

"நீதிபதி முதற் பலரும் வியப்புறச் சுவாமிகள் எழுந்தருளித் திருவாய் மலர்ந்தருளியவாக்கன்றோ! எமக்கு இப்பெருஞ் செயத்தை உண்டாக்கிற்று இஃது எல்லோரும் அறிந்த தொன்றே; சுவாமிகள் பரங்குன்று நோக்கி என்னைப் பார்த்து "நின்வழக்கு நினக்குச் செயமாகவே முடியும்; அங்ஙனமின்றி மாறுபட வரின் நீறு கண்டிவக வேல்மயில் என்பவற்றை வேண்டிலன்" என அன்பாலளைந்து அருளிய ஆசி மந்திரம் என மனத்தை விட்டகலாது. இத்துணை அன்பும் ஆர்வமும் உளவேல் எமக்கு அபஜெயமும் எய்துவதாமோ?"

சென்ற 1906-ம் ஆண்டில் இவர் தேவகோட்டைச் சைவசீலராகிய திருவாளர்கள் அரு. சோம. சோமசுந்தரச் செட்டியார், மெ. அரு. நா. இராமநாதச் செட்டியார் ஆகிய இருவருடைய பொருளுதவியைப் பெற்றுச் "செந்திநாதையர் சுவாமி யந்திரசாலை" என்னும் பெயரால் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவித் தாமெழுதிய நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு, ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்ணியமாட்சி, வைதிகசுத்தாத்துவித சைவ சித்தாந்த தத்துவப்பட வினாவிடை, விவிலிய குற்சிதக் குறிப்பு முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார்.

இவர் நீடித்தகாலம் காசியாகிய புண்ணிய தலத்தில் வசித்த காரணத்தினாற் காசிவாசி செந்திநாதஐயர் என வழங்கப்பட்டார். இப்படிப்பட்ட பிராமண உத்தமர் சென்ற 1921-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி இவ்வுலக வாழ்வை ஒருவினார்.

ஐயர் குலத்தில் ஆரியந் திராவிடம் ஆங்கிலம் என்னும் மும்மொழிகளையுமுணர்ந்து, புராண இதிகாசம் இலக்கண இலக்கியங்களிற் சிறந்தவர்களாய் சிவபத்தி பூண்டவராய், கற்றோர் பெரியாரால் நன்கு மதிக்கப் படுபவராய் தாமெடுத்த கருமத்திற் கண்ணுங் கருத்துமுடையவராய், வாதகு வன்மையோடுகூடியவராய் அஞ்சாநெஞ்சு படைத்தவராய் வாழ்ந்தவர் எவருமிலரெனலாம்.

### நாகலிங்க நீதியினம்

—

நீதிபதி ஸ்ரீ நாகலிங்கம் அவர்களுக்குச் செய்த நீதியினத் தொடர்பில் பரபரப்பு இன்னமும் நிலைத்து நிற்கின்றது. சேர். ஜோன் கொத்தலாவல இலங்கைக்குத் திரும்பியபின் நிலைமையைத் திருத்த முயலுவாராம்.

### ஓய்வுச் சம்பளம் வந்துவிட்டது! என்றுசொன்ன?

—0—

பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு ஓய்வுச்சம்பளம் கொடுப்பது பற்றி ஆராய்வதற்கு ஒரு உபசபை அமைக்கவேண்டும் என்னும் பிரேரணை பதினாறு பேர் பாதகமாக வாக்களிக்க இருபத்தாறு பேர் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்பட்டது.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமயத்தில் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


# அனுபவமே பகுத்தறிவுக்கு ஆதாரம்

## பகுத்துப் பார்க்கும் மூன்றுவழிகள்

மதுரை தியாகராசா கல்லூரித் தத்துவக் கழகத்தின் சார்பில் சமயத்திற்கும் பகுத்தறிவிற்கும் உள்ள தொடர்பு என்பது பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அக் கல்லூரிப் பேராசிரியர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த கருத்துரையின் சுருக்கம் இங்கே தரப் பெறுகின்றது.

சர்க்கரையை நாம் சுவைத்துப்பார்த்தால்தான் அதனுடைய இனிமை நமக்குத் தெரியும். விஞ்ஞான பூர்வமாகப் பல சோதனைகளை நடத்தி அதனுடைய அங்கங்களைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யலாம். ஆனால் சர்க்கரையைச் சுவைத்துப் பார்க்காமல் அதனுடைய இனிமையை உணர முடியாது. அதைப் போன்று அனுபவத்தினால் தான் பகுத்தறிவு பகுத்துப்பார்க்கும் தன்மை உண்டாகிறது. முடிவாகப் பார்த்தால் பகுத்துப்பார்ப்பது என்பதுதான் என்ன? நம்முடைய அனுபவத்தினால் கிடைத்த ஒரு உண்மையே பகுத்தறிவு எனப்படும். ஒரு அனுபவத்தையும் மற்றொரு அனுபவத்தையும் தொடர்புபடுத்திப் பார்க்கும்போதுதான் நமக்கு இந்தப் பகுத்தறிவு என்பது கிடைக்கிறது. எனவே அனுபவங்களிலிருந்துதான் நாம் பகுத்தறிவையடைய முடியுமேயன்றிப் பகுத்தறிவினால் அனுபவத்தையடைய முடியாது.

பகுத்துப் பார்ப்பது என்பதற்கு 3 வித வழிகள் உண்டு. அவைகளை அனுபவம், சுருதி, யுக்தி என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். நாம் அனுபவித்துப் பார்ப்பதுதான் அனுபவம்என்பது. பலர் அனுபவித்த பல உண்மைகளை நம்பி ஏற்றுக்கொள்வது தான் சுருதி என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். நம் அனுபவங்களிலும் பிறர் அனுபவங்களிலும் வேறுபாடிருக்கலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் யுக்தியை அனுசரித்து நாம உண்மைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

பகுத்தறிவு என்பது மாறக்கூடாத ஒன்றல்ல. எனவே இங்கிலீஷில் சரியான கல்வி பெறாத 15, 16 வயது இளைஞர்கள் திடீரென ஆண்டவன் இருக்கிறானா? அல்லது இல்லையா? என்ற முடிவுக்கு வருவது பொருந்தாததாகும்.

முடிவாக மூன்றுவிடயங்களை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்று பல அனுபவங்கள் எல்லாம் மதம் ஆகிவிடமாட்டா. பகுத்தறிவு என்பது மாறுதிருக்கும் ஒன்றல்ல. மனிதனுடைய சமய உணர்ச்சியை மாற்றுவது எளிதான செயல் அல்ல.

———

### சுதந்திர தினக் கொண்டாட்டம்

———

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் அரசாங்க ஆதரவுடன் சுதந்திரதினக் கொண்டாட்டம் நன்கு நடைபெற்றது. தலைமைத் தேசாதிபதி முதலியோர் அறிவுரைகள் ஆற்றினர்.

## சீமாட்டி இராமநாதன் நினைவுநாள்

## ஒப்புயர்வற்ற சேவைகளுக்குப் பாராட்டு

சீமாட்டி இராமநாதன் அம்மையார் நினைவுநாள் இராமநாதன் கல்லூரியில் கொண்டாடப் பெற்றது. அத்தருணம் பேசும்போது சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இந்நாட்டு மக்களுக்குச் செய்த பெருஞ் சேவைகளுக்கு மூலகாரணராயிருந்தவர் அம்மையார் அவர்களே, சேர். இராமநாதன் அவர்கள் அபாயமான காலத்தில் அஞ்சா நெஞ்சத்துடன் இங்கிலாந்துக்குச் செல்ல உறுதுணையாய் நின்று ஊக்கம் கொடுத்ததும் அம்மையார் அவர்களே என அவுடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ. ஸ்ரீகாந்தா அவர்கள் கூறினர்.

தம்மைப்போலத் தம் அயலவரையும் நேசித்து வேண்டிய வேண்டிய காலத்தில் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தொண்டாற்றினர். அம்மையார் அவர் பெருஞ் சமயத் தலைவராயிருந்ததோடு இத்தகைய பெருங் குணங்களால் பெரும் தேசத் தலைவருமாயினர் என்று வணபிதா எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் பேசும்போது கூறினர்.

காஷ்மீர்க் காரியத்தில் நடுநிலைக்கிடமில்லை!

தெல்லிமாநகரத்தில் பத்திரிகை நிருபர்களுக்குப் பதிலளிக்கும்போது, வாய்க்கால் நீர் வாக்குவாதம், அகதிகளின் பொருட்பிணக்கு முதலியவை போன்றதல்ல, காஷ்மீர்க் காரியம். காஷ்மீர்க்காரியத்தில் நாங்கள் கடைசித் தீர்மானம் செய்துவிட்டோம். ஐ. நா. சபையில் இக் காரியம் எப்படி எடுத்தாளப்படுகின்றதென்று நாங்கள் பொருட்படுத்தமாட்டோம். இது நடுநிலைக்கூற்றுக்கு இடம் கொடுப்ப தொன்றல்ல என்று கூறினர் காஷ்மீர் முதலமைச்சர் ஸ்ரீ பக்ஷி குலாம் முகமது.

### அரசாங்க விளம்பரம்

வன பரிபாலனப் பகுதி

N 258 பாக்தன் அரசாங்க மாக்காலையில் 14-2-55 காலை 10 மணி தொடக்கம் 30 குவியல் அரிந்த மரங்களும், 1-ம் வகுப்பு 41 கம்புகளும், 8-ம் வகுப்பு 85 கம்புகளும் பகிரங்க ஏலத்தில் வடபகுதி வன உத்தியோகஸ்தரால் விற்கப்படும். மரம் வாங்குவோர் டிப்போ ஓப்பரின் அனுமதியுடன் மரங்களைப் பார்வையிடுவதுடன், அவரிடமிருந்து விற்பனை நிபந்தனைகளையும் அறிந்துகொள்ளவேண்டும்.

G 47-11

### தேவை

யாழ்ப்பாணம் ஐக்கிய பண்டகசாலைச் சமாசத்திற்கு

1 வண்ணார்பண்ணை நாவலர் பள்ளிக்கூடத்தடியில் ஸ்தாபிக்க இருக்கும் பண்டகசாலைக்கு ஒருமனேஜர். மாதச்சம்பளம் அலவென்ஸ் உட்பட ரூபா 75 பிணைப்பணம் ரொக்கம் ரூபா 500.

2 ஒரு விற்பனையாளன்: மாதச் சம்பளம் ரூபா 40 அலவென்ஸ் 30 வீதம்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் 14-2-55 க்கு முன் மனுப்பண்ணவும்.

த. சீனிவாசகம்
கௌரவ காரியதரிசி
74/3 ஆஸ்பத்திரி ரோட்டு
யாழ்ப்பாணம்,
7—2—55

M, 223 11-2

### கோட்டு விற்பனவு விளம்பரம்

அராலி வடக்கு முத்துக்குமாரு ஆறுமுகம் பெண் மங்கையர்க்கரசியும் —வழக்காளி

1. வட்டுக்கோட்டை மேற்கு சின்னப்பு பேரம்பலமும்

2. அராலி வடக்கு கந்தர் சின்னத்தம்பி கைம்பெண் முத்துப்பிள்ளையும், —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 11344-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1955 ம் ஆண்டு மாசி மீ 19 உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 தொடக்கம் இந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

1. வட்டுக்கோட்டைக்கோவிற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை அற்றிபுலோவும் பொறுடு பட்டை நிலைப்பரப்பு 12, கல்வீடும், கிணறும், வான்பயிர்களும் எல்லை கிழக்கு அம்பலவாணருக்கும் பெண் மகேஸ்வரிக்குமுரிய ஆதனம். வடக்கும் அம்பலவாணருக்கும் பெண் மகேஸ்வரிக்கும் கணபதிப்பிள்ளைக்கும் பக்கீரனுக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு ஆறுமுகம் கைம்பெண் பொன்னுவுக்கும் முத்தையா கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் மாணிக்கம் பெண் சின்னப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். தெற்கு மாணிக்கம் பெண் சின்னப்பிள்ளைக்குமுரிய ஆதனமும் ஒழுங்கையும் இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
சித்தகேணி, கொம்மிஷனர்.
20-1-55.

M 224 11-2 55

### நுட்பத் தொழிற் கல்விச்சாலை

யாழ்ப்பாண நகரசங்கத்தாருக்கும் சேர். கந்தையா வைத்தியநாதனுக்குமிடையில் நடந்த ஆலோசனைக் கூட்டமொன்றிலே யாழ்ப்பாணத்தில் நுட்பத்தொழில் அறிவுடையார் இல்லாமையால் உண்டாகும் வருத்தம் குறிப்பிடப்பட்டது. நுட்பத் தொழிற் கல்விச்சாலை ஒன்று அமைப்பதற்கு 1955 — 56-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கும்படி வேண்டிய ஒழுங்கு தாம செய்திருப்பதாக சேர். கந்தையா வைத்தியநாதன் மறுமொழி கூறினர்.

# அகில இலங்கை இந்து மாமன்றம்

கொழும்பு பம்பலப்பிட்டியா இந்துக்கல்லூரி மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சைவச் சபைகளின் பிரதிநிதிகளும் பல சைவப் பெருமக்களும் கூடி அகில இலங்கை இந்துமாமன்றம் என்னும் சபையை அமைத்தனர். இச்சபையில் இலங்கையிலுள்ள சைவச் சபைகளின் பிரதிநிதிகள் உறுப்பினராயமைகின்றனர்.

இலங்கை அரசாங்கப் பிரதிநிதியாய் இந்தியாவில் இருந்த ஸ்ரீ சி. குமாரசாமி அவர்கள் தலைவராக, ஸ்ரீமான்கள் கே. ஆள்வாப்பிள்ளை, ஏ. கந்தையா ஆகிய இருவரும் காரியதரிசிகளாகத் தெரிவு செய்யப்பெற்றனர். ஸ்ரீமான்கள் எஸ். சோமசுந்தரம், ரீ. முத்துசாமிப்பிள்ளை, எஸ். இராசரத்தினம், ஏ பெரியதம்பிப்பிள்ளை, பி. ஸ்ரீ ஸ்கந்தராசா, ஏ. கே. வேலுப்பிள்ளை, கே. மதியாபரணம், எஸ். சிவசுப்பிரமணியம், பண்டிதர் சரவணமுத்து, ஸ்ரீமதி கே. சதாசிவம் ஆகியோர் உபதலைவர்களாகத் தெரிவு செய்யப் பெற்றனர். ஸ்ரீமான் என். மாணிக்க இடைக்காடர் தனாதிகாரியாகத் தெரிவு செய்யப் பட்டார். ஐம்பதுபேர் நிருவாக சபை உறுப்பினராய்த் தெரிவு செய்யப்பெற்றனர்.

நேயர்கள் நெஞ்சம்

# மணி ஓசை வரும் முன்னே ..........?

—————:o:——— ———

சென்ற 28-1-55-ல் வெளிவந்த இந்துசாதனத்தில் "சைவ மக்களுக்கு உடன் உடன் உதவி" என்னும் தலையங்கத்துடன் ஓர் சைவாபிமானி உருக்கமாக விடுத்திருந்த வேண்டுகோளைக் கண்ணுற்றேன். அன்னிய மதத்தினர் நம் நாட்டில் கல்லூரிகளையும் வேறு பல பொது நிலையங்களையும் அமைத்து சமூகத்தொண்டு புரிவதாகச் சொல்லிக்கொண்டு, சைவ இளைஞர்களையும் மற்றையோரையும் மதம்மாற்றக் கங்கணங் கட்டும் இக்காலத்திலே, சைவக் கிராமத்திலேயுள்ள சைவப்பாடசாலையை அன்னிய மதத்தினர் கையிற் சிக்கவிடாது, சைவப்பெருமக்களோ சைவம் வளர்க்கும் சபைகளோ, முன்வந்து மேற்படி ஊரிலுள்ள சைவப் பிள்ளைகள் தம் மதப் பாடசாலையில் கல்வி பயில ஆவன வற்றைச் செய்யும்படி மேற்படி அன்பர் குறிப்பிட்டிருந்தார். அன்னிய மதத்தவரின் பாடசாலைகளில் நம் சைவப் பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்புவதால் வரும் அனர்த்தங்கள் பலப்பல! சமீபத் மதத்தவர் புகுந்து பேரிதிலே தீவுப் பகுதியைச் சேர்ந்தவரும், தலைமுறை தலைமுறையாகச் சைவ வாழ்க்கை வாழ்ந்தவரும் ஒரு இந்துக குடும்பத்தில் பிறந்தவருமாகிய ஒரு அன்பர் ஆசிரிய கலாசாலையொன்றிற் புகுந்து கல்வி கற்பதற்காக கிறிஸ்த மதத்தைத் தழுவியது யாம் அறிவோம்! அக் கல்லூரியில் சேருவதற்காக "ஞானஸ்நானம்" பெறுகின்ற நிமிடம் வரையிலும் இவர் சைவ மகனாக இருந்தார். ஆகவே, இது போன்ற மதம் மாற்றும் தொண்டர் கூட்டத்தின் வலையினுள் அகப்பட்டு இன்னற்படும் இளைஞர்கள் பலர் உளர்! மதம மாற்றும் கொடுமையைத் தடுக்க, சைவம் வளர்க்கும் சபையீரே! சமய வளர்ச்சியை விரும்பும் நன்மக்களே! 'இந்துசாதனம்' மூலமாக "சைவாபிமானி" விடுத்த வேண்டுகோளை ஊன்றிச் சிந்தித்து மேற்படி கல்லூரியின் கடனை 35,000 ரூபாவையும் ஒரு பொருளெனக் கருதாது, அக் கடனைத் தீர்த்து, பிறர் விலைவிக்க நாங்களே காரணராக வாழாமல், சைவக் கிராமத்திலே சைவப் பிள்ளைகள் பயில வழி கோலுங்கள்!

'வித்தியா தானமே சிறந்த தானம்' என்பது நாம் அறியாத ஒன்றா .... .... ....? எனவே, மதம் மாறும் இளைஞர்கள் பெருகி வருமிக்காலத்திலே, மத மாற்றத்துக்கு, கல்லூரிகளும், முக்கிய தாபனமாக அமைகின்றன என்பதை அறிந்து 'செயற்கரிய செயலைச் செய்ய முன்வரும்படி அன்பாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன், நமது சைவசமயம் வளர— சமூக ஒற்றுமை பலம் பெற அபிமானமுள்ள சைவ சீலர்களே! தயாள சிந்தையுள்ள பெருமக்களே! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!! ஆவன உடனே செய்யுங்கள்!!! யானை வரும் பின்னே — மணி ஓசை வரும் முன்னே? .... .... ....?

இங்ஙனம்,

"தமிழ் அபிமானி"

அம்பாள் வீதி,
காயன் மார்கட்டு.
6—2—55.

### பாக்கிஸ்தான் அரசாங்கத்துக்குப் பாதகமான தீர்ப்பு

பாக்கிஸ்தான் முதல் மந்திரி ஸ்ரீ. முகமது அலி அமெரிக்காவிலிருந்தபொழுது பாக்கிஸ்தான் தலைமைத் தேசாதிபதி பாக்கிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைப் பதவியிலிருந்து நீக்கினர். முகமது அலி உடனே திரும்பிவந்து சேர்ந்தபோதிலும் தேசாதிபதியின் செயலைச் சரியென அங்கீகரித்தார்.

அரசியல் நிர்ணயச் சபைத் தலைவர் ஸ்ரீ. தமிசுதீன்கான தேசாதிபதியின் செயல் சட்ட விரோதமானது என்று வழக்குத் தொடர்ந்தார். அவருடைய வழக்கை ஏற்றுத் தேசாதிபதியின் செயல் சட்ட விரோதமானதே என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது. இதனால் மிகப் பல சிக்கல்கள் உண்டாகும். ஆனால் அரசாங்கம் இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு வழக்கை அனுப்பத் தீர்மானித்துள்ளது.

### 41 வருட சேவையின் பின் இளைப்பாறுகிறார்

வவுனியா புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றி அரசினர் சேவையிலிருந்து 41 ஆண்டு உத்தியோகம் பார்த்த திரு. பொ. தம்பிப்பிள்ளை அண்மையில் ஓய்வு பெற்றிருக்கின்றார். இவர் இலங்கையின் பலவேறிடங்களிற் கடமையாற்றிச் சமூக சேவையிலும் ஈடுபட்டிருக்கின்றார்.

### அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழா

புதன்கிழமை 9 - 2 - 55 ல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பல பெருமக்களின் வாழ்த்துச் செய்திகள் பல பக்கங்களிலுமிருந்து வந்துகுவிந்தன. இப் பல்கலைக் கழகம் தமிழ் மக்களுக்குச் செய்து வரும கல்வித் தொண்டிற்குப் பாராட்டுரைகள் மாரி மாரியாக வழங்கப்படுகின்றன. ஈழநாட்டு மக்களும் தங்கள் நன்றியை நேரில் எடுத்துச் சொல்லிப் பாராட்டுதற்குச் சென்றிருந்தார்கள்.

### தென்கிழக்கு ஆசிய மாநாட்டில் இலங்கை

ஒரு முறையிற் பார்க்கும்போது, தென்கிழக்கு ஆசிய மகாநாட்டில் இலங்கை சேரக்கூடும் என்று இலண்டன்மாநகரில் கூறினாராம் இலங்கை முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல.




## சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செறிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப்பொருமல் புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, வெள்ளை, சூலை, சந்துவாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி வஜீகரம் பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக் கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்த்து. மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

| | | |
|---|---|---|
| ஒரு இருத்தல் விலை | ரூபாய் | 25-00 |
| அரை ,, | ,, | 12-50 |
| கால் ,, | ,, | 6-25. |

வி. பி. பி. செலவு பிரத்தியேகம். வி. பி. பி. மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

விலாசம்:

K. ஆறுமுகம்பிள்ளை
இலக்கம்: 3/1 தட்டாதெரு,
கோட்டை முனை,
மட்டக்களப்பு.

[M. 153 29-10]

# வற்றுதலூற்றுயுள்ளது எங்கள் மதம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தங்களையும் பகைமைகளையும் களைந்து சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கு வாய்த்த ஒரேயொரு புனித சாதனம் சமயம். பிணக்கும் பகைமையும் வளர்க்கும் சாதனமாக அதைப் பாவிக்கத் தூண்டும், மதவெறி. ஆகையால் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்.

எங்கள் சமயம் மிகப் புராதனமானது. சரித்திரகாலத்திற்கும் அப்பாற்பட்ட காலத்தில் உதயமானது. உலகத்தில் தோன்றிய ஏனைய சமயங்களையெல்லாம் சகோதர பாவனையில் தழுவி நிற்பது. எத்தனையோ எதிர்ப்புகளும் இடையூறுகளும் காலத்திற்கு காலம் நேர்ந்தும், அவற்றையெல்லாம் வென்று வென்று இன்னும் ஒளிகாண்டு நிற்கின்றது. பழமைமட்டும் அதன் மாண்பு அன்று. புதுமையும் அதற்கு உண்டு. தாழ்ச்சியும் தளர்ச்சியும் அதற்கு நேர்ந்தபோதெல்லாம் புதுப்புது ஞானச் செல்வர்களைத் தெய்வ அருள் நமக்கு அளித்து அநுபூதி நிலையினைப் புதுப்பித்து வந்திருக்கின்றது. ஆகையாலன்றோ, அது இன்னும் வற்றுத ஊற்றுய், பல்லாயிரக்கணக்கான மக்களது ஞானதாகம் தீர்க்கும் ஒரு ஜீவநதியாய் விளங்கிக்கொண்டிருக்கின்றது.

பழைய காலத்தில் உலக சமயங்களுக்கெல்லாம் அரசர்களே காவலர்களாகவும் வளர்க்கும் வள்ளல்களாகவும் திகழ்ந்தார்கள். அந்த முறையில் எங்கள் மதத்தையும், மொழியையும் மாண்புமிக்க பண்பாட்டையும் பாதுகாத்துப் பரிபாலிக்கும் பொறுப்பை எங்கள் அரசர்களே வகித்துவந்தார்கள். கால கதியில் இந்த நிலைமை மாறியது. எங்கள் மதத்தின் தாயகமாகிய இந்தியாவும் இலங்கையும் அந்நிய ராட்சியில் சிக்கிக்கொண்ட காலம் தொடக்கமாக எங்கள் மதம், மொழி ஆகியன ஆதரவற்ற அநாதைநிலையினை அடைந்தன. அரசியலில் நாம் அந்நியருக்கு அடிமைப்பட்டதன் விளைவாக அக் காலத்துக் கிறிஸ்துவப் பாதிரிமாரின் மதமாற்ற முயற்சிகள் தீவிரமாக நடைபெறலாயின. பெருந்தொகையினரான எங்கள் மதத்தவர் பிற மதம் புகுந்தனர். மத உரிமை வழங்கிய ஆங்கிலேயர் ஆட்சியில்கூட மதமாற்ற வஞ்சனைகள் குறைந்தபாடில்லை. எங்கள் மதத்திற்கு மதிப்புக் குறைவும் தாழ்ச்சியும் ஏற்பட்டது. அந்த நேரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தோன்றினர். அவரது ஞான வீர முயற்சியினால் நமது மதத்திற்கு நேர்ந்த ஆபத்து நீங்கியது, தனது ஒப்பற்ற நாவன்மையாலும் எழுத்து வன்மையாலும் எங்கள் நாட்டிலும் தாயகமாகிய இந்தியாவிலும் மங்கிக் கிடந்த எங்கள் சமயத்தைக் குன்றின் மேலிட்ட தீபம் போல் விளங்கச் செய்தார். அதே வேளையில், மாக்ஸ் முல்லர் போன்ற மேற்றிசை அறிஞர்கள் எங்கள் சமய சாத்திரங்களையும் தத்துவ ஞானத்தையும் ஆராய்ந்து விளக்கஞ் செய்ததோடு, அவற்றின் ஒளிமிக்க மாண்பையும் உலகிற்கு எடுத்துச் சொல்லத்தொடங்கினர். மேற்றிசை நாடுகளில், இதன் விளைவாக, எங்கள் மதத்தின் புகழ் உதயமாகத் தொடங்கும் போது, இந்துமத ஞான சூரியனும், வேதாந்த கேசரியுமாமாகிய ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவிற்குச் சென்று நிகழ்த்திய வீரமுழக்கம் மேற்றிசை ஞானிகளின் கண்ணைத் திறந்தது. இந்துக்களை அஞ்ஞானிகளென்று நினைத்த மேல்நாடு இந்துக்களே முதுஞானிகள் என்று நினைக்கும் நிலைமை ஏற்பட்டது.

இந்தியாவிலும் கிளர்ச்சி உண்டாயது. ஏட்டிலும் பாட்டிலும் ஆலயத்திலும் அறிவாளிகள் உள்ளத்திலும் ஒடுங்கிக்கிடந்த எங்கள் மதத்தின் சிறப்பைப் பாமர மக்களும் உணரத்தொடங்கினர் நாட்டின் பல பாகங்களிலும் சங்கங்கள் தோன்றின. இலங்கையிலும் அவ்வாறே பல சபைகள் தோன்றி, இயன்றளவில் இன்று வரையும் சமயத் தொண்டாற்றி வந்திருக்கின்றன. ஆனால் செய்ய வேண்டியன இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

## யாழ்ப்பாணம் நகரசபை

### வாகன மிருக வரி — 1955

(அ) இத்தாற் சகலரும் அறிக:— 1947ம் ஆண்டின் 29ம் இலக்க நகரசபைச் சட்டம் 245ம், 246ம் பிரிவுகளின்படி கொடுக்கப்பட வேண்டிய வாகன, மிருக, வரி 31-3-1955 பிற்பகல் 3 மணிக்கு அல்லது அதற்குமுன் நகரசபைக் கந்தோரில் கொடுக்கப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின் கொடுக்கப்படும் பணம், 1947ம் ஆண்டின் 29ம் இலக்கச்சட்டம் 252ம், 255ம் பிரிவுகளின்படியும் அவற்றுடன் வாசிக்கப்பட வேண்டிய சபை உபவிதிகளின்படியும், பிடிகட்டளைப் (வாறன்ற்) பணமாய் 10% வீதப் பணம் மேலதிகமாகக் கொடுக்கப்படவேண்டியதாகும்

(ஆ) மேலே குறித்தவாறு வரிப்பணம் கொடுக்கப்படாவிட்டால், 1947ம் ஆண்டின் 29ம் இலக்கச் சட்டம் 245ம், 246ம் பிரிவின்படி வரிப் பணம் கொடுக்கப்பட வேண்டிய வாகனங்கள், மிருகங்கள், சபையின் அதிகாரம் கொடுக்கப்பட்ட உத்தியோகத்தரால் பிடிக்கப்படத் தக்கவையாகும்.

கே. சண்முகம்
நகரசபைக்காரியாதிகாரி

நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம், 2-2-55.

G 49 11-2-55

## இந்திய அரிசி

இந்தியாவின் எல்லாத் துறைமுகங்களிலுமிருந்து அரிசி ஏற்றுமதி செய்வதற்கு இந்திய அரசாங்கம் அனுமதி கொடுக்கப்போகின்றதாம். தீர்வைப் பணமும் குறைக்கப்படுகின்றது.

## இஸ்லாமிய தமிழ் இலக்கியம்

சென்னை தென் இந்திய கல்விக் கழகப் பொன் விழாவில் முஸ்லிம் தமிழ்க் கவிஞர் தினக் கூட்டத்தில் கொழும்பு சகிரு கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஏ. எம். ஏ. அசீஸ் அவர்கள் தலைமை வகித்துப் பேசும் போது, முஸ்லிம் தமிழ் இலக்கியம் சிலரோடு கூடி வளர்ந்து வருவதொன்று என்றும் அது இஸ்லாமிய தத்துவங்கள், எண்ணங்கள், வாழ்க்கை வழிகள் ஆகியவற்றை முற்காலத்தில் உலகுக்கு வாரிவழங்கியது என்றும் அப்படியே வருங்காலத்திலும் அதுபன்மடங்கு கூடச் செய்யவேண்டுமென்றும் கூறினர்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள், 13—2—55 — 19——2—55

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் உம்முடைய இளைய சகோதர சகோதரிகள் உமக்கு அதிக உதவியாயிருப்பர், ஆனால் குடும்பச் சூழலில் சிறு குழப்பங்களுக்கிடமுண்டு. பணத்துறையில் நல்லவாரம். நண்பர் மூலம் இலாபத்துக்குமிடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

கொஞ்சம் தொந்தரவான வாரம் உம்முடைய சில நண்பரோடு அல்லது இனத்தவர்களோடு நீர் கோபிக்கவேண்டி வரக்கூடும். ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம். வழக்கமான நடைமுறைகளின்படி செய்க; அப்படிச் செய்தால் நீர் சித்திஎய்தவே வேண்டும்,

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

குடும்பச் சிக்கல்கள் இன்னமும் தீர்க்கப்படாமலிருக்கும். நண்பருடன் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. தனலாபம்நிச்சயம ஆனால் செலவு மதிகரிக்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் குடும்பக்குழப்பங்களுக்கிடமுண்டு. உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது, புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரமாட்டா. இரகசியப் பகைவரால் சில தொந்தரவுகளுக்குமிடமுண்டு, ஆனால் அவர்கள் உமக்கு எவ்விதமாயும் தீமைசெய்யமுடியாது.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

உம்முடைய கந்தோரில் அல்லது வியாபாரநிலையத்தில் சிறு தொந்தரவுகள் தவிர இந்தவாரம் நல்லதாயிருக்கும். புது முயற்சிகளில் புகழும் சித்தியும்நிச்சயம் வாரஇறுதியில் சுகவீனங்களுக்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் உம்முடைய சொந்தவுகளில் பல சிக்கல் நீங்கிவிடும், தேகசுகம் திருந்தவேண்டும். தனலாபமும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக,

**துலாம்**சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

பொதுவாக நல்லவாரம். பின்னுக்கு நன்மை தரக்கூடிய சில மாற்றங்களை நீர் செய்யவேண்டி வரும். காணிகள் காணிப்பொருள்கள்மூலம் இலாபங்களுக்கிடமுண்டு

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்தவாரம் தனலாபம் நிச்சயம். அதிகம் முயலாமல் உம்முடைய முயற்சியில நீர் சித்திஎய்தக்கூடியதாயிருக்கும். வார இறுதியில குடும்பசூழலில் சில குழப்பங்களுக்கிடமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.

வாரத்தின் முதலிரு நாட்களும் அதிகம் தொந்தரவாயிருக்கும், நண்பருடனும் இனத்தவர்களுடனும் சண்டைகளுக்கிடமுண்டு. வாரமிகுதி நல்லாயிருக்கும் ஆனால் எதுவும் தகுதிவாய்ந்தது செய்துமுடிக்கமாட்டீர்.

**மகராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

முதல் இரு நாட்களும் புதுமுயற்சிகளுக்கு நல்லனவாயிருக்கும். செவ்வாயும் புதனும் கவனமாய்க் கழிக்கவேண்டும். வாரமிகுதி திரும்பவும்நல்லதாகும். ஆனால் நீர் சித்திபெறுதற்கு மிக முயன்றுழைக்க வேண்டும,

**கும்பராசி** அவிட்டம் 3, 4 பாதம், சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

பின் அரை வாரத்திலும் முன் அரை வாரம் நலமதாயிருக்கும், இந்த நாட்களில் விசேடமானகாரியம் எதையும் நீர் ஒழுங்குபண்ணத் தொடங்கலாம், வியாழன் வெள்ளியும் சனி காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

கடைசி நாளைத்தவிர இந்தவாரம் நல்ல பலனைத்தரும. தனலாபமும் சமுகசித்தியும் நிச்சயம் ஆனால் அவமானங்களுக்காளாகாமல் உம்மைப் பாதுகாத்துக்கொள்ளும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna on Friday February 11, 1955.